



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (27.01.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், உலக மகளிர் உச்சி மாநாடு 2026 தொடக்க விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் கருப்பைவாய்ப் புற்றுநோயை தடுத்திடும் வகையில் முதற்கட்டமாக தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய நான்கு மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 14 வயதுடைய 30,209 மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கிடும் திட்டத்தினை பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் டாக்டர் கே. சோமசுந்தரம் அவர்களிடம் வழங்கி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் பல்வேறு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.01.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், உலக மகளிர் உச்சி மாநாடு 2026 தொடக்க விழாவில், உலக வங்கியின் ரூ. 1,185 கோடி நிதியுதவியுடன் ரூ.5000 கோடி மதிப்பீட்டிலான தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் பல்வேறு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# “உலக மகளிர் உச்சி மாநாடு 2026”

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.01.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், உலக மகளிர் உச்சி மாநாடு 2026 தொடக்க விழாவில், பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளைப் பார்வையிட்டார்.

முதற்கட்டமாக, 4 மாவட்டங்களில் இருக்கும் 30 ஆயிரத்து 209 மாணவிகளுக்கு இந்த தடுப்பூசியை செலுத்தப் போகிறோம்! மேலும், மார்பகப் புற்றுநோய் உள்ளிட்ட புற்றுநோய்களை தொடக்கத்திலே யே கண்டறிய தமிழ்நாடு முழுவதும் 38 நடமாடும் மருத்துவ ஊர்திகளை ’வெல்னஸ் ஆன் வீல்ஸ்” என்ற பெயரில் கடந்த நவம்பரில் தொடங்கி வைத்திருக்கிறேன்.

பெண்களுக்கு பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் புற்றுநோய்க்கான தரமான சிகிச்சையை வழங்க, காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை 120 கோடி ரூபாய் செலவில் பெரிய அளவில் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது!

### தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள்!

ஊட்டச்சத்தை உறுதிசெய் மூலமாக பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்கள் வழங்குகிறோம்.

இப்படி மகளிர் நலன்காக்கும் நம்முடைய அரசின் திட்டங்களின் நீட்சியாகதான் இந்த “TN-WE-SAFE” திட்டம் அமைந்திருக்கிறது! வளர்ந்து வரும் துறைகளில் பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை மட்டும் இந்த திட்டம் செய்யவில்லை! அப்படி அவர்கள் வேலைக்கு செல்ல வேண்டும் என்றால் குழந்தைகள், வயதானவர்களை கவனித்துக்கொள்ளும் பொறுப்பை யாராவது எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த நடைமுறை சிக்கலை உணர்ந்து, குழந்தை பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு, பாதுகாப்பான தங்குமிடங்கள் என்று அதற்கான ஆதரவு சேவைகளையும் இந்த திட்டம் வழங்குவது பாராட்டுக்குரியது!

மேலும், பெண்களுக்கு தேவையான டெக்னாலஜி சப்போர்ட், திறன் பயிற்சி ஆகியவற்றையும் இந்த திட்டத்தில் வழங்குகிறோம்! பெண்களின் பாதுகாப்பிலும் இந்த திட்டம் அக்கறை செலுத்துகிறது! ஏன் என்றால், பாதுகாப்பான சமூகத்தில்தான் பெண்கள் அதிகமாக வெளியே வேலைக்கு வர முடியும்! அதனால் தான், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் அதிக அளவிலான பெண்கள் தொழிற்சாலைகளில் பணிபுரிகிறார்கள்.

### பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறோம்!

பெண்களுக்கான காவல் அவசர உதவி எண்: 181 - காவலன் S.O.S. மொபைல் செயலி உள்ளிட்டவை மூலமாக பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறோம்! முழுக்க முழுக்க நம்முடைய திராவிட மாடல் அரசின் திட்டங்களோடு ஒத்துப்போகும் குறிக்கோள்களை இந்த ‘தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம்’ கொண்டிருக்கிறது! அதனால்தான், இந்த உச்சி மாநாட்டுக்கு ஒரு விருந்தினராக வராமல், உங்களில் ஒருவனாக, ஒரு பார்ட்னராக நான் வந்திருக்கிறேன்!

ஆண் - பெண்ணுக்கு இடையிலான பாலின இடைவெளியை குறைத்தால், பொருளாதாரம் வேகமாக வளரும் என்று I.M.F. அமைப்பே சொல்கிறது! நாங்களும், 2030-க்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட தமிழ்நாடு எனும் எங்கள் இலக்கை அடைய பெண்கள்தான் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும் என்று செயல்பட்டு வருகிறோம்!

இந்த உலக மகளிர் உச்சி மாநாட்டில் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு நான் தரும் ப்ராமிஸ் என்னவென்றால், “ஒவ்வொரு பெண்ணும் கல்வி கற்கக் கூடிய, ஒவ்வொரு பெண்ணும் சுதந்திரமாக வாழக் கூடிய, பெண்கள் மரியாதையான ஊதியத்தைப் பெற்றிட, பெண்கள் தொழில்முனைவோர்களாக மாற, பெண்கள் எந்தவித அச்சமும் இல்லாமல் வாழ, எனது தலைமையிலான உங்கள் திராவிட மாடல் அரசானது உரிய கட்டமைப்பை உருவாக்கும்; அதற்காக தொடர்ந்து உழைக்கும்! உழைக்கும்! என்று சொல்லி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

> **இவையெல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தது போன்று இந்த அரசின் முத்திரைத் திட்டம்! அதுதான், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்! 1 கோடியே 30 இலட்சம் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை என்பது, இதுவரை யாரும் செய்யாத வரலாற்றுச் சாதனை! இன்றைக்கு இந்தியாவில் இருக்கும் மற்ற மாநிலங்களும் நம்மைப் பார்த்து பின்பற்றி வரும் சாதனை! பெண்களின் சுயமரியாதை, பொருளாதார சுதந்திரம், தன்னம்பிக்கை ஆகியவை உரிமைத்தொகையால் கூடியிருக்கிறது!**

## பல மாணவர்களுக்கு ஆசானாகத் திகழ்ந்து இறுதி வரையில்

# தமிழ்ப் பணியாற்றிய தமிழறிஞர் தெ.ஞானசுந்தரம் மறைவு - தமிழுலகுக்குப் பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.28

**மூத்த தமிழறிஞர் தெ. ஞானசுந்தரம் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-**

மூத்த தமிழறிஞரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முன்னாள் துணைத்தலைவருமான தெ. ஞானசுந்தரம் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

வைணவ உரைவளத்தில் முனைவரான தெ.ஞானசுந்தரம் அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியதோடு, புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் கம்பன் இருக்கையில் முதல் பேராசிரியராக 2 ஆண்டுகள் பொறுப்பில் இருந்த சிறப்புக்குரியவர். முதுபெரும் தமிழறிஞர்களான மு.வரதராசனார், அ.ச. ஞானசம்பந்தன் முதலியோருடன் பழகும் பேற்றினைப் பெற்றவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பினையும் கொண்டிருந்தார்.



ஞானசுந்தரம் அவர்கள் பக்தி இலக்கியங்கள் சார்ந்து, பல ஆய்வுநூல்களை எழுதியதோடு, தலைசிறந்த சொற்பொழிவாளராகவும் தமிழ் மேடைகளை அலங்கரித்த அறிஞர் ஆவார். எண்ணற்ற தமிழ் அமைப்புகள், அறக்கட்டளைகளின் விருதுகளைப் பெற்றிருந்தாலும், 2024-ஆம் ஆண்டுக்கான ‘இலக்கிய மாமணி’ விருதை மரபுத்தமிழ் பிரிவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவருக்கு நான் வழங்கியபோது பெரிதும் அகமகிழ்ந்தார். ”தனியாரிடம் பெறும் விருதுகள் மகிழ்ச்சியளிப்பன என்றாலும், அரசு அளிக்கும் விருதுதான் அங்கீகாரம் பெறக்கூடியது” என அப்போது மன நிறைவுடன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும் பேராசிரியர்களிடம் தமிழ் பயின்று, பல மாணவர்களுக்கு ஆசானாகத் திகழ்ந்து, இறுதிவரையில் சுறுசுறுப்பாக இயங்கித் தமிழ்ப்பணியாற்றிய அன்னாரது மறைவு தமிழுலகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பு. அன்னாரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும், தமிழன்பர்களுக்கும், அவரது மாணவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.